செய்தி வெளியீடு எண். 219 நாள் 21.04.2018

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 20.04.2018 அன்று நடைபெற்றது.

முதலாவதாக வேளாண் துறையில் வேளாண் துறை சார்ந்த செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப தகவல்கள் அனைத்தும் விவசாயிகளிடம் விரைவில் சென்றடைவதற்காக உழவன் என்ற கைபேசி செயலி தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தான குறும்படம் மூலம் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இச்செயலியில் விவசாயிகள் தங்களது கைபேசி எண்ணை முன்பதிவு செய்து வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் மான்யத் திட்டங்கள், உரம் மற்றும் விதைகள் இருப்பு விவரம், வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள், விளைப்பொருட்களின் சந்தை விலை, வானிலை அடிப்படையில் வேளாண் அறிவுரைகள், வேளாண்மை விரிவாக்க மைய பணியாளர்கள் வருகை முதலியவற்றை அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது

திருவள்ளூர் மாவட்டத்தில் நகராட்சிகளின் மூலம் இயற்கை உரங்கள் தயாரிக்கப்படுகிறது. தற்போது ஆவடி நகராட்சியிலும், திருவள்ளூர் மற்றும் திருத்தணி பகுதிகளில் இயற்கை உரம் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். விவசாயிகளின் உற்பத்தி இரு மடங்காகவும், வருமானம் மும்மடங்காகவும் அதிகரிக்க கிராம தன்னாட்சி இயக்கம் திருவள்ளூர் மாவட்டத்தில் 11 வட்டாரங்களில் (ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு மற்றும் அம்பத்தூர் நீங்கலாக) 91 வருவாய் கிராமங்களில் 14.04.2018 முதல் துவங்கப்பட்டு 05.05.2018 வரை நடைபெற உள்ளது. இவ்வியக்கத்தில் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த செயல்விளக்கம் மற்றும் திறம் மேம்பாட்டு பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்குதல், வங்கி கணக்கு வைத்திருப்போர்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை ரூ.12 மற்றும் ரூ.330 செலுத்தினால், விபத்து ஏற்படும்பட்சத்தில் காப்பீடுத் தொகை வழங்குவது, ஒரு பல்பு ரூ.50 வீதம் LED பல்புகள் அந்தந்த மின்துறை அலுவலகங்களில் வழங்குவது, அனைத்து குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவது போன்ற திட்டங்கள் விவசாயிகளுக்கு விளக்கப்படும்.

மாவட்டத்தில் இதுவரை நெற் பயிரில் மொத்தம் 102657 ஹெக்டெர், திருந்திய நெற்பயிரில் 68207 ஹெக்டெர், சிறுதானியங்கள் 1079 ஹெக்டேர், பயறுவகைகள் 10733 ஹெக்டேர், எண்ணைய்வித்துக்கள் 8797 ஹெக்டெர், கரும்பு நடவு 675 ஹெக்டேர், மறுதாம்பு 5045 ஹெக்டேர் பயிரிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் நடப்பு மாதம் முடிய நிகர பயிர் சாகுபடி பரப்பு 1,28,986 ஹெக்டெர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், 2018-ஆம் ஆண்டில் இதுவரை 19.55 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையில் நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சொட்டுநீர் பாசனம், மழைத்தூவுவான் மற்றும் தெளிப்புநீர் பாசனம் ஆகியவை முழு மானியமாக சிறு,குறு விவசாயிகளுக்கும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மான்யமாகவும் வழங்கப்படுகிறது.

கூட்டுப்பண்ணையத் திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலம் 45 உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்களும் (Farmer Producer Group), தோட்டக்கலைத் துறை மூலம் 11 உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் ரூபாய் ஐந்து இலட்சம் நிதி மூலதனம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்தப்பட்ட உழவர் உற்பத்தியாளர் குழு நிர்வாகிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் விற்பனையாளர்கள் கூட்டுக்குழு கூட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட விலைகளின் அடிப்படையில் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் தேவையான வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 2018-19 கூட்டுப்பண்ணைய திட்டத்தில் வேளாண் துறை சார்பாக 44 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகள் அதிக அளவில் பங்குபெற்று பயனடைய வேண்டும்.

நீடித்த நிலையான மானாவாரி இயக்கத் திட்டத்தின்கீழ் (MSDA) மானாவாரியாக உள்ள தரிசு நிலங்களில் சாகுபடி செய்வதற்கு மாவட்டத்தில் திருத்தணி, ஆர்.கே.பேட்டை, மற்றும் பள்ளிப்பட்டு வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டு, புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் பணிகள் மற்றும் மானாவாரி தொகுப்பு விவசாய குழுக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

பின்னர், கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

பிரதம மந்திரி காப்பீட்டு திட்டத்தின்கீழ் காப்பீடு செய்து காப்பீடு தொகை பெறாத விடுபட்ட விவசாயிகளுக்கு இழப்புத் தொகை வழங்கவும், நீர் ஆதாரங்களான ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் நீர்வரத்துக்கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், தடுப்பணை கட்டுதல், வரத்துக்கால்வாய், ஏரி குளங்களை சீர் செய்தல், விவசாயிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அளிக்கப்படும் மனுக்களுக்கு உரிய பதில் அளித்தல், காலியாக உள்ள வேளாண்மை உதவி அலுவலர் பணியிடங்களை நிரபபுதல், கரும்பு நிலுவைத் தொகை உடனடியாக தருதல், மணல்கொள்ளை தடுத்தல், ஏரிகளில் நிறுவனக்கழிவு கலப்பதால் ஏரிகள் மாசுபடுவதை தடுக்க நடவடிக்கை எடுத்தல், மின்சாரம் தடையின்றி வழங்குதல், பூண்டி நீர்தேக்கத்தினை தூய்மைப்படுத்துதல், நேரடி நெல் விதைக் கொள்முதல் நிலையம் அமைத்தல், கால்நடைகளுக்கு பவுண்டரி அமைத்தல், கும்மிடிப்பூண்டி ரயில்நிலையம் அருகே உள்ள டாஸ்மாக் கடை எண். 8742 அகற்றுதல், போன்ற கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர்.

இறுதியாக பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் குறித்தான கையேட்டினை விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கி, விவசாயிகளிடமிருந்து 100-க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பி.சந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) திரு.கோ.பாண்டியன், வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத்திட்டம்) திருமதி பி.ஜானகிராணி, வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) திரு.வி.எபினேசன், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு. வெ.முத்துசாமி (பொன்னேரி), திரு ஜெயராமன் (திருத்தணி), திருமதி.கெ.ரா.திவ்யஸ்ரீ (திருவள்ளூர்), திரு.பன்னீர்செல்வம் (அம்பத்தூர்), அனைத்து துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**